**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 124 /2019**
**connected அசல் வழக்கு எண். 103/2019**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11–ம் நாள் வியாழன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.01.2024 | தந்தை/கணவர் பெயர்: | கிருஷ்ணன் |
| பெயர்: | சந்திரபாபு (PW–5 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | தொழுதூர் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 62/2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 11.01.2024.**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை**

முதல் விசாரணை நான் சொன்னதின் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது. புல எண் 18/1 ல் திரிபுரசுந்தரி சாகுபடி செய்து வரும் நிலத்திற்கு மேற்கில் எனக்கு 100 குழி நிலம் எந்த புல எண்ணில் உள்ளது என்றால் புல எண் 18/1 ல் உள்ளது. புல எண் 19/2– ல் திரிபுரசுந்தரி சாகுபடி செய்து வரும் நிலத்திற்கு கிழக்கில் எனக்கு 100 குழி நிலம் எந்த புல எண்ணில் உள்ளது என்றால் புல எண் 19/2 ல் உள்ளது. புல எண் 18/1 மற்றும் புல எண் 19/2 –ல் எனக்கு நிலம் உள்ளது என்பதை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில்

சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

புல எண் 18/1 மற்றும் புல எண் 19/2 திரிபுரசுந்தரி பெயரிலோ அல்லது அவரது கணவர் பெயரிலோ உள்ளதற்கான ஆவணம் ஏதேனும் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. லட்சுமி, ஜீவபாலன், ஜீவசங்கர் 6 மா நிலத்தினை 2006 முதல் 2020 வரை முருகேசன் , திரிபுரசுந்தரி சாகுபடி செய்து வருவதாக முதல் விசாரணையில் பொய்யா சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. திரிபுரசுந்தரின் கணவர் முருகேசனுக்கு நான் என்ன உறவு முறை என்றால் பெரியப்பா மகன் ஆக வேண்டும்.

முருகேசன் எனது உறவுக்காரர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகேசனும், திரிபுரசுந்தரியும் தாவா கிராமத்தில் எத்தனை ஏக்கர் நிலம் வைத்துள்ளார்கள் என்றால் சுமார் 15 ஏக்கர் நிலம் வைத்துள்ளார்கள். முருகேசன், திரிபுரசுந்தரி நிலங்களில் நான் பண்ணை வேலை செய்து வருவதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் முருகேசனும், திரிபுரசுந்தரியும் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து இதுநாள்வரையில் ஜீவபாலன், ஜீவசங்கர், லட்சுமி ஆகியோர்களின் சுவாதீனத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.